*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC 332/2020*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court PW1(LW- 1)*

*Name / Father's Name:* ஞானராஜ் த/பெ. சவரிமுத்து

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30-06-2022*

துவக்க நேரம் 04.10

**முதல் விசாரணை**

நான் தற்போது கள்ளக்குறிச்சி வனசரகத்தில் வனசரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின் போது கல்வராயன் பகுதி வனசரக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.02.2018 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கரியகோவில் பீட் பிளாக் 5 சூளாங்குறிச்சிக்கு என்னுடன் தங்கராஜ் வனவர், சண்முகம் பீட் வனக்காப்பாளர் மற்றும் கிருஷ்ணராஜ் வனக்காப்பாளர் ஆகியோருடன் சென்று பார்த்த போது ஆஜர் எதிரி வெள்ளையன் அரசு காப்புக் காட்டை சுத்தம் செய்து இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து இருந்தார். அவரிடம் அரசு காப்புக் காட்டை ஆக்கிரமிப்பது குற்றம் என சொல்லி விசாரித்த போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். சம்பவ இடத்திலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலமும் அவரிடம் பெறப்பட்டது. பின்னர் அங்கு வைத்தே மகஜர், H- நமுனா, உத்தேச வரைபடம், பீட் மேப் ஆகியவற்றை தயார் செய்தோம். புகைபடமும் எடுத்தோம். ஆக்கிரமிப்பு செய்த இடத்திற்கான GPS பாயின்டுகளையும் குறித்து எடுத்து அலுவலகத்தில் வைத்து மேப்பிங் செய்தோம். பின்னர் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். வழக்கு விசாரணையை முடித்து ஆவணங்களுடன் அ-படிவத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **H- நமுனா அசாஆ.1, மகஜர் ஸ்டேட்மென்ட் அசாஆ.2, வரைபடம் அசாஆ.3, GPS பாயின்ட் குறித்த ஸ்கேட்ச் அசாஆ.4, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அசாஆ. 5, சம்பவ இட புகைபடம் அசாஆ.6 ஆகும்.**

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கான சர்வே எண் -ஐ அ-படிவத்தில் குறிப்பிட்டு உள்ளீர்களா

என்றால் இல்லை. சம்பவ இடம் தலைகரை கிராமத்திற்கு செல்லும் மண்பாதையை ஒட்டி அமைந்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 131 -ல் 70 ஏர் நிலத்தை 06.06.86 ல் Forest Settlement Officer அவர்கள் மூலமாக FSC 5/83 ஆக எதிரி வெள்ளையனின் அப்பா கோடாங்கி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வெள்ளையன் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் தான் அவர் வேலை செய்து கொண்டு இருந்தார் என்றும் அதனை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக இவ்வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் கையெழுத்து ஒயிட்னர் வைத்து திருத்தி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் எங்களது அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

முடிவு நேரம் 03.15

S ARUNKUMAR
Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.06.30 17:54:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்